# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
## மேட்டுர்,
## தேதி: 01.07.2025
## OS. No. 341/2015
## வழக்கு சாட்சி PW.2–சுப்ரமணி, த/பெ.அம்மாசி

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

24) சேகர் வீட்டிற்கு வடக்கு பெரியண்ணனின் கூரை வீடு உள்ளது என்றால் பெரியண்ணனின் அட்டை வீடு உள்ளது. அங்கு வீடு கட்டும் போதே அட்டை வீடாகத்தான் கட்டப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், அந்த இடத்தில் பெரியண்ணனின் கூரை வீடு தான் உள்ளது என்றால் சரியல்ல. சேகர் அவர்களின் தொகுப்பு வீட்டிற்கு மின்சாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு மின் கம்பங்கள் சேகர் வீட்டிற்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, சேகர் வீட்டிற்கு வடக்கு பக்கம் ரோட்டில் ஒன்றும், காட்டில் ஒன்றும் உள்ளது. அந்த காட்டின் ச.எண்.248/1A3 என்றால் சரிதான். ஒரு மின்கம்பம் பெரியண்ணனின் வீட்டிற்கும், சுப்ரமணியன் வீட்டிற்கும் வரும் காட்டிற்கு இடையில் அமைந்துள்ளது. அந்த காட்டின் ச.எண்.248/1A3 ஆகும்.

25) மேற்படி மின்கம்பங்களை பற்றி நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் சொல்லியுள்ளரா என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். சுப்ரமணியத்தின் வீடு வில்லை வீடு ஆகும். 2ம் வாதி சுப்ரமணி வீட்டிற்கு தெற்குபுறம் தான் சேகர் அவர்களின் வீடு உள்ளது. 2ம் வாதி சுப்ரமணி வீட்டிற்கு தலைவாசல் கிழக்குபக்கம் உள்ளது. அந்த இடத்திலுள்ள சேகர் வீடு கூரை வீடு ஆகும், அதற்கு தலைவாசல் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. 2ம் வாதி சுப்ரமணி வீட்டிற்கு வடக்கில் பெரியண்ணனின் இரண்டு வில்லை வீடுகள் உள்ளது, அதற்கு தலைவாசல் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. மேற்கண்ட வீடுகள் அனைத்தும் ச.எண்.248/1B ல் அமைந்துள்ளது.

26) பெரியண்ணனின் மேற்கண்ட வில்லை வீடுகளுக்கும், ச.எண்.248/1A3 ல் அமைந்துள்ள பெரியண்ணனின் அட்டை வீட்டிற்கும் இடையே தென்வடலாக ஒரு கல்கட்டு உள்ளது என்றால் சரிதான். அந்த கல்கட்டு சுமார் 15, 20 வருடங்கள் இருக்கும், அதன் உயரம் 4 அடி இருக்கும். பெரியண்ணனின் வில்லை வீடுகளுக்கு வடக்கே 17 ம் பிரதிவாதி கந்தசாமியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு ச.எண்.248/1A2 என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வீட்டிற்கு தலைவாசல் தெற்குபக்கம் அமைந்துள்ளது. 17 ம் பிரதிவாதி கந்தசாமியின் வீட்டிற்கு வடக்கே 13 ம் பிரதிவாதி கொழந்தையப்பன் தொகுப்பு வீடு உள்ளது. அந்த வீட்டிற்கு தலைவாசல் எங்கு உள்ளது என்றால் நான் அந்த பக்கம் செல்வதில்லை அதனால் எனக்கு தெரியவில்லை. நான் பிறந்ததிலிருந்தே அங்கு தான் குடியுள்ளேன்.

27) 13 ம் பிரதிவாதி கொழந்தைபையனின் தொகுப்பு வீட்டிற்கு மின் கம்பம் எந்த பக்கம் அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. 13 ம் பிரதிவாதி கொழந்தைபையனின் தொகுப்பு வீட்டிற்கு எந்த பக்கம் 10 ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் தொகுப்பு வீடு அமைந்துள்ளது என்றால் மேற்கில் உள்ளது, தலைசால் கிழக்கில் அமைந்துள்ளது. 10 ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் தொகுப்பு வீட்டிற்கு வடக்கே அவரது ஓட்டு வீடு உள்ளது, அதன் தலைவாசல் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. அதற்கு வடக்கே 1 ம் பிரதிவாதி பழனியின் கூரை வீடு உள்ளது. அந்த கூரை வீட்டிற்கு வடக்கே அவரது அட்டை வீடு உள்ளது, மேற்கண்ட இரு வீடுகளுக்கும் தலைவாசல் கிழக்கு பக்கம் உள்ளது.

28) மேற்கண்ட பிரதிவாதிகளான கொழந்தைபையன், ஆறுமுகம், பழனி ஆகியோர்களின் வீடுகள் ச.எண்.248/1A1 ல் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் விட்டு கொடுப்பதாக சொன்ன பாதைக்கு மேற்கண்ட பிரதிவாதிகள் சிந்தாமணியூர் ரோட்டிற்கு அவர்கள் வீட்டிலிருந்து வரவேண்டும் என்றால் அவரவர்கள் காட்டு வழியாகவே வரலாம். நான் சொல்வது தவறு என்றும், மேற்கண்ட பிரதிாவதிகள் அனைவரும் ச.எண்.248/1A3 க்கு மேற்கு புறமுள்ள ச.எண்.248/1A1, 248/1A2, 248/1B ஆகிய

நிலங்களிலுள்ள அவரவர் வீடுகளிலிருந்து கிழக்கு புறமாக உள்ள கல்கட்டிற்கு மேற்குபுறமுள்ள 4 அடி அகல நடைபாதைக்கு வந்து, அதன் தென்புறமுள்ள 10 அடி அகல கிழமேல் பாதைவழியாகத்தான் சிந்தாமணியூர் செல்லும் தார் ரோட்டிற்கு செல்ல இயலும் என்றால் சரியல்ல. அதனால் தான் அ.வ.எண்.194/2013 வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு முரணாக தகவமைப்பு குறித்துதவறான தகவலை சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட 4 அடி தடத்தை நாங்கள் மறித்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

29) மேற்படி அ.வ.எண்.194/2013 வழக்கு தாக்கல் செய்து இரண்டு வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கில் உள்ள சங்கதிகளையும், ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தையும் மறைத்து எங்களுக்கு சாதகமாக உள்ள ஒருவரை அழைத்து சென்று, தவறான அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்து, இந்த வழக்கில் குறியீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தவறு என்று அ.வ.எண்.194/2013 ல் ஏதேனும் மனு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் சொல்வதுபோல் அமைப்பு பூமியில் இல்லை என்று, எனக்கு முன் சாட்சியம் சொன்ன எங்கள் தரப்பு சாட்சியே சொல்லியுள்ளார் என்றும், அந்த சாட்சியத்தை முரண்படுத்தவேண்டி என்னை சாட்சியாக விசாரிக்கிறோம் என்றால் சரியல்ல.

30) சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு பிரதிவாதிகள் பழனி, ஆறுமுகம், கொழந்தைபையன், கந்தசாமி, பெரியண்ணன், சுப்ரமணி மற்றும் அந்த இடத்தில் குடியுள்ள சேகர் ஆகிறோர் செல்லவேண்டும் என்றால் ச.எண்.248/1A1, 248/1A2, 248/1B ஆகிய நிலங்களிலுள்ள அவரவர் வீடுகளிலிருந்து கிழக்கு புறமாக உள்ள கல்கட்டிற்கு மேற்குபுறமுள்ள 4 அடி அகல நடைபாதைக்கு வந்து, அதன் தென்புறமுள்ள 10 அடி அகல கிழமேல் பாதைவழியாகத்தான் சிந்தாமணியூர் செல்லும் தார் ரோட்டிற்கு செல்ல இயலும் என்றும், அதேபோல் பெரியண்ணன் தனது கூரை வீடு மற்றும் சேகர் தனது தொகுப்பு வீடு ஆகியவை அமைந்துள்ள ச.எண்.248/1A3 ல்

இருந்து தெற்குபுறமாக 10 அடி அகல பாதை வழியாக வந்து தான் சிந்தாமணியூர் தார் சாலைக்கு செல்ல இயலும் என்றால் சரியல்ல.

31) நாங்கள் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்றபோது அ.வ.எண்.194/2013 ல் உள்ளவாறு தடம் இல்லை என்றும், அதற்கு மாற்றுப்பாதை உள்ளதாக காட்டினோமா என்றால் இல்லை, அங்கே எந்த தடமும் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், நிலையிலுள்ள தடத்தை நீதிமன்ற ஆணையர் காண்பித்தபோது அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், அதற்காகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அந்த தடம் 80 ஆண்டுகளுக்கு மேலாக நிலையிலுள்ளது என்றும், அதேபோல் தரப்பினர்கள் அனைவருமே காவேரி என்பவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் வழியாக அவர்களுக்கு பாதை உரிமை உள்ளது என்றும், அதை இல்லை என்று மறுப்பதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அந்த பதிலுரையை பற்றி எனது முதல் விசாரணையில் என்ன சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

32) இந்த வழக்கே அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை நீட்டிப்பதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தடம் உரிமை இல்லை என்று சொல்லி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கே தவறான சங்கதிகளை முன்வைத்து, தவறாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், உண்மைகளை மறைத்து வழக்கு மூலமே இல்லாமல் தவறான சொத்து விவரத்தை முன் நிறுத்தி, உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதேபோல் இந்த வழக்கு நிலுவையில் 1ம் வாதி மற்றும் 4ம் வாதி ஆகியோர் இறந்த நிலையில் தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரும் உரிமை அவர்களோடு இறந்துவிடுகிறது என்றும், அதே வழக்கு மூலத்தில் அவரின் வாரிசுகள் என்று கூறி, மற்ற வாதிகள் இந்த வழக்கை தொடர்ந்து நடத்த உரிமை இல்லை என்றும், அவர்களுக்கு வழக்கு மூலம் இல்லாத காரணத்தால்

இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்த வழக்கு அதிகப்படியான நஷ்ட ஈடுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.